JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.84/2020
PW.5

| பெயர் | ராஜசேகர் | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | மாசானம் | தொழில் | மின்சாரத் துறையில் ஓய்வு |
| கிராமம் | குமந்தாபுரம் | வயது | 76 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மின்சாரத்துறையில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர். அசா.1 அழகுசுந்தரி, அசா.2 மன்மோகன், அசா.3 கார்த்திக், அசா.4 அந்தோணி ஆகியோரை தெரியும். வழக்கில் இறந்து போன குமரேசன் என் உறவினர். கடந்த 14.07.2018ம் தேதி நான் என்னுடைய வீட்டில் இருந்த போது என் மகன் எனக்கு போன் மூலம் குமரேசனுக்கு ஆட்டோவில் விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்து விட்டார். அவரை சவக்கிடங்கில்வைத்திருந்தார்கள். ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். ஆட்டோவை ஓட்டியது கணேசன் என கூறினார்கள்.போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரி கணேசனுக்கு என் ஊர் கிடையாது என்றால் சரிதான், சொக்கம்பட்டி. இறந்தவர் என் உறவினர் என்றால் சரிதான். விபத்து குறித்து நான் எதுவும் கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.84/2020
PW.4

| பெயர் | ஆண்டனி | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | செல்லப்பா | தொழில் | பள்ளி முதல்வர் |
| கிராமம் | குமந்தாபுரம் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பள்ளியில் முதல்வராக வேலை செய்து வருகிறேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியாது. அசா.1 அழகுசுந்தரி, அசா.2 மன்மோகன், அசா.3 கார்த்திக் ஆகியோரை தெரியும். வழக்கில் இறந்து போன குமரேசன் என் உடன்பிறந்த அண்ணன். கடந்த 14.07.2018ம் தேதி என் அண்ணன் எனக்கு ஆட்டோவில் ஏறுவதற்கு முன்பு போன் செய்தார். ஆட்டோவில் ஏறி 10நிமிடத்தில் ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டதால் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு கிருஷ்ணாபுரம் கோவிலுக்கு அருகே பாலத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு யாரும் இல்லை. அந்த இடத்தில் போலிசார் இருந்தனர். அங்கு நான் விசாரித்த போது என் அண்ணனின் செல்போன் இருந்தது. அப்போது தான் என் அண்ணன் இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டேன். கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். கடையநல்லூர் மருத்துவமனை ஸ்டாப்பில் ஏறி கிருஷ்ணாபுரம் வரும் பொழுது ஆட்டோ வேகமாக வந்து மற்றொரு வாகனத்தின் மீது மோத வந்ததாகவும் மேற்படி எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுநர் சத்தம் போட்டதாகவும் அதன் பிறகு விபத்து ஏற்பட்டதாகவும் கேள்விப்பட்டேன். ஆட்டோ ஓட்டுநர் கணேசன் என்று கூறினார்கள். நான் மருத்துவமனையில் வைத்து அவரை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொன்னது போன்று தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். நான் சொன்னது போல் எந்த விவரமும் விபத்து குறித்து கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கணேசனை மருத்துவமனையில் வைத்து நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.84/2020
PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | சித்திரை | தொழில் | லேப்டெக்னிசியன் |
| கிராமம் | குமந்தாபுரம் | வயது | 21 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லேப் டெக்னிசீயனாக வேலை செய்து வருகிறேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியாது. அசா.1 அழகுசுந்தரி, அசா.2 மன்மோகன் ஆகியோரை தெரியும். வழக்கில் இறந்து போன குமரேசன் என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு இரவு 9 மணியளவில் கடையநல்லூர் பேருந்து நிலையத்தில் வைத்து ஆட்டோவில் நானும், மோகனும் டியூசன் சென்று விட்டு வந்து ஏறினோம். அதன்பிறகு இறந்து போன நபர் அவர் பெயர் தெரியவில்லை, அவரும் ஏறினார். பின்னர் சுந்தரியும் ஆட்டோவில் ஏறினார். எங்கள் ஊரிலிருந்து ஒரு அரை கிலோமீட்டர் தொலைவில் ஆட்டோ கவிழ்ந்து விட்டது. நான் போன் பார்த்து கொண்டு வந்ததால் ஆட்டோ எவ்வாறு கவிழ்ந்தது என்று எனக்கு தெரியாது. எங்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. மற்றவர்களுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. பதற்றத்தில் நான் சென்று விட்டேன். ஆட்டோவை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.07.2018 ம் தேதியன்று இரவு 9 மணியளவில் நானும், அசா.1, அசா.2 மற்றும் வழக்கில் இறந்து போன குமரேசனும் கடையநல்லூர் பஜாரில் இருந்து இந்த வழக்கின்

எதிரியின் பயணிகள் ஆட்டோவில் ஏறி சென்று கொண்டிருந்த போது குறுக்கிட்டான் கோவில் பாலம் அருகே எதிரி தன்னுடைய பயணிகள் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.84/2020
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மன்மோகன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | சாமி | தொழில் | தனியார் கம்பெனி |
| கிராமம் | குமந்தாபுரம் | வயது | 24 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியாது. அசா.1 அழகுசுந்தரி என்பவரை தெரியும். சாட்சி காத்திக் என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன குமரேசன் என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2018ம் வருடம் நான் கடையநல்லூரில் குமந்தாபுரத்திற்கு செல்ல ஆட்டோவில் ஏறினேன். ஆட்டோவில் நானும், கார்த்திக் முதலில் ஏறினோம். அதன் பிறகு சுந்தரியும், குமரேசனும் ஏறினார்கள். நாங்கள் சென்று கொண்டிருந்த போது கிருஷ்ணாபுரத்தை தாண்டி ஆற்றுப்பாலத்தில் டிவைடர் மீது ஏறி ஆட்டோ அப்செட்டாகி விழுந்தது. அந்த சமயத்தில் யாருக்கு என்ன ஏற்பட்டது என்று எனக்கு நினைவில் இல்லை. ஆட்டோவை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.07.2018 ம் தேதியன்று இரவு 9 மணியளவில் நானும், அசா.1 காத்திக் மற்றும் வழக்கில் இறந்து போன குமரேசனும் கடையநல்லூர் பஜாரில் இருந்து இந்த வழக்கின் எதிரியின் பயணிகள் ஆட்டோவில் ஏறி சென்று கொண்டிருந்த போது குறுக்கிட்டான் கோவில் பாலம் அருகே எதிரி தன்னுடைய பயணிகள்

ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.84/2020
PW.1

| பெயர் | அழகுசுந்தரி | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| கணவர் பெயர் | முருகையா | தொழில் | சத்துணவு உதவியாளர் (ஓய்வு) |
| கிராமம் | குமந்தாபுரம் | வயது | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவு உதவியாளராக வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியாது. சாட்சிகள் மன்மோகன், காத்திக் ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்து போன குமரேசன் என்பவரை தெரியும். தேதி நினைவில் இல்லை. ஏப்ரல் மாதம் 2018 ம் வருடம் இரவு 8 மணியளவில் நான் கடையநல்லூரில் குமந்தாபுரத்திற்கு செல்ல ஆட்டோவில் ஏறினேன். குமந்தாபுரத்திற்கும் கடையநல்லுருக்கும் நடுவே ஒரு பாலத்தில் நாங்கள் சென்று கொண்டிருந்த போது எதிரே பேருந்து வந்தது, அப்போது ஆட்டோவை ஓட்டுநர்ஒதுக்கினார். அப்போது பாலம் தட்டி ஆட்டோ தலைகீழாக விழுந்து விட்டது. எனக்கு நெற்றியில் முற்றிலும் காயம் ஏற்பட்டது. குமரேசன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். இரவு நேரம் என்பதால் ஆட்டோவை ஓட்டிய நபரின் முகம் தெரியவில்லை. ஆனால் சொக்கம்பட்டியை சேர்ந்தவர்.

கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு எங்கள் ஊரில் உள்ள நபர் அவரது காரில் அழைத்து சென்றார். நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் தென்காசி மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் தனியார் மருத்துவமனையில்சிகிச்சை

பெற்றேன். நான் சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்தார்கள். அவரிடம் நடந்த விபரத்தை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.07.2018 ம் தேதியன்று இரவு 9 மணியளவில் நானும், சாட்சிகள் மன்மோகன் மற்றும் காத்திக் வழக்கில் இறந்து போன குமரேசனும் கடையநல்லூர் பஜாரில் இருந்து இந்த வழக்கின் எதிரியின் பயணிகள் ஆட்டோவில் ஏறி சென்று கொண்டிருந்த போது குறுக்கிட்டான் கோவில் பாலம் அருகே எதிரி தன்னுடைய பயணிகள் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi<br>
Judicial Magistrate,<br>
Tenkasi